# சைவசித்தாந்த மேன்மைகளில் தேவாரம் : பண்ணும் இசை மரபும்.

க. கிருபாசக்தி

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர் வாழ்வு சைவத்தையும், தமிழையும், இசையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இச் சிறப்புவாய்ந்த சைவம் வேற்று சமயத்தின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த சமயநெறிக் காலம் எனப்படும். பல்லவர் காலகட்டத்தில் மறுமலர்ச்சியடைய வேண்டிய தேவை ஏற்படுகிறது. பல்லவர் காலம் பக்தியை அடிப்படையாகக் கொண்டது. இக்காலத்தில் எழுந்த தேவாரங்கள் சைவத்தின் சமூக, சமய, தத்துவ, இசைசார்ந்த வளர்ச்சிக்கும், மக்களையும், மன்னர்களையும் சைவத்தின்பால் ஈர்த்து மீட்டுருவாக்கம் செய்வதற்கும் வித்திட்டன. தேவார முதலிகளான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஒவ்வொரு ஊராகச் சென்று தலங்கள் தோறும் மொழி உணர்வையும், சமய உணர்வையும், பிரதேச உணர்வையும் தூண்டி இவற்றினூடாக சைவசித்தாந்த உண்மைகளையும், அதன் மேன்மைகளையும் தங்கள் பாடல்கள் மூலம் புலப்படுத்தினார்கள். இப்பாடல்களும், கருத்துக்களும் பாமர மக்கள் வரை சென்றடைவதற்கும், மக்களைக் கவர்வதற்கும் சைவநாயன்மார்கள் இப்பாடல்களைப் பண்கூட்டிப் பாடினார்கள். அவர்கள் ஒவ்வொரு தலத்திற்கும் சென்று பதிகம் பாடும்போது அற்புதங்களும் நிகழ்ந்த காரணத்தால், இப்பாடல்களும், கருத்துக்களும் செவிநுகர் கனிகளாக மக்களைச் சென்றடைந்தன. இத் தேவாரமுதலிகளின் பாடல்கள் அடங்கிய திருமுறைகளில் காணப்படும் சைவசித்தாந்த மேன்மைகள் அவர்கள் செய்த அளப்பரிய அற்புதங்களின் அடிப்படையிலும், பண் வகைகளின் அடிப்படையிலும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ் ஆய்வில் பகுப்பாய்வு முறையும் ஒப்பீட்டு முறையும் பின்பற்றப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** தேவாரம். சைவசித்தாந்தம். பண். திருமுறை.

**அறிமுகம்**

பல்லவர் காலச் சமய மறுமலர்ச்சி பக்தி இயக்கமாகப் பரிணமித்தது. அதுபக்தி உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. பக்தியியக்கம் புராணக் கதைகளைச் சிறப்பாகப் பயன்படுத்தியது. சமணரின் தருக்க அறிவும், ஒழுக்க உயர்வும் பக்தியுணர்ச்சிப் பிரவாகத்தில் தலைதூக்க மாட்டாமல் ஆழ்ந்து விட்டன.[1] இக்காலத்தில் தோன்றிய சைவநாயன்மார்களால் பாடப்பட்ட பாடல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டு ஒப்பற்ற கருவூலங்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் தேவார முதலிகளால் பாடப்பட்ட முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்று சிறப்பிக்கப்படுகின்றன. 8ம் திருமுறையைப் பாடியருளிய மணிவாசகர் உடன் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் சமயகுரவர் என்ற சிறப்பைப் பெறுகின்றனர். இவர்களில் தேவார முதலிகள் தலயாத்திரை செய்து பாடல்கள் மூலம் அற்புதங்கள் புரிந்து, இறைவனின் அருள், ஆன்மா இறைவனை அடையும் நெறிமுறைகள், வழிபடும் முறை, இறையருளால் எக்காரியத்தையும் நிகழ்த்தலாம் என்ற அடிப்படையிலான நம்பிக்கை, இறைபெருமை போன்றவற்றை மக்கள் மயப்படுத்தி சைவசித்தாந்தக் கருத்துக்கள் பாமர மக்களையும் சென்றடைய வழிவகுத்துள்ளனர். இவ்வாய்வின் நோக்கங்களாக சைவசித்தாந்த மேன்மைகள் தேவாரங்கள் மூலமாக இலகுவாக மக்களை அடைவதை வெளிப்படுத்தல், பண் இசை ஊடாகப் பதிகம் பாடி அற்புதங்கள் நிகழ்த்தியதை ஆராய்தல், நோய் நீக்கும் மருந்தாக இசை பயன்பட்டதை தலயாத்

பதில் தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.
*0777286245 kkaruna67@yahoo.com*